உ
சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ருகூ] யாழ்ப்பாணம்:—தாரண ஹு மாசிமீ அவ (1945 பெப்ரவரிமீ 19உ திங்கட்கிழமை) [இல அசு

# சமபல பிரதிநிதித்துவத்தின் நோக்கம்

## பெரும்பான்மைச் சமூகத்தினர் நிரந்தர ஆதிக்கம் செலுத்துவதா?

### ஸோல்பெரி விசாரணைச் சபையினர்முன் தமிழர் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்

கொழும்பு நகர மண்டபத்தில் சென்ற வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். 100 பேரடங்கிய பெரிய தூது கோஷ்டியுடன். திரு ஜி. ஜீ. பொன்னம்பலம் பிரசன்னமாகி ஸோல்பெரி விசாரணைச் சபையினர்முன் அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் சார்பாகச் சாட்சியங் கொடுத்தார்.

இடமில்லாமல் பெருந்திரளான மக்கள் நகர மண்டபத்துக்கு வெளியிலும், அநேகர் கதவு, ஜன்னல் முதலிய இடங்களிலும் நின்றனர். வந்திருந்த கூட்டத்தில் பல தமிழ்ப் பெண்மணிகளும், கலாசாலை மாணவ மாணவிகளும் இருந்தனர். மிஸ்டர் எச். எம். நியூன்ஹாமும், பேராசிரியர் ஏ. பேகமனும் வந்திருந்தனர். தூதுகோஷ்டியில் ஸ்ரீமான்மான்கள், ஜே. தியாகராஜா, எஸ். நடேசன், ஐ. எக்ஸ். பெரேரா, கோ. நடேசையர், டாக்டர் இ. எம். வீ. நாகநாதன் முதலியோரும் அடங்கியிருந்தனர். திரு. பொன்னம்பலம் தம் மனைவியாருடன் குறிப்பிட்ட நேரத்துக்குச் சில நிமஷங்கள் முன்னதாக வந்தார். அவர் மண்டபத்துள் நுழைந்தபோது மக்கள் சந்தோஷ ஆரவாரஞ் செய்தனர்.

அன்று ஸோல்பெரிவிசாரணைச்சபையினர் தங்கள் ஆசனங்களில் வந்தமர்ந்ததும், ஸோல்பெரிபிரபு கூட்டத்தை நோக்கிக் கூறியதாவது.—

இன்று இங்கு கூடியிருக்கும் பெருந்திரளான மக்களை வரவேற்கிறோம், நீங்கள் எல்லீரும் அமைதியாயிராதுபோனால் சடைசியில நிற்கும் பல மக்கள் சாட்சிகள் கூறுவதையும், விசாரணைச் சபையினர் கூறுவதையும் கேட்க முடியாமற் போய்விடுமெனக் குறிப்பிட விரும்புகிறேன். தூது கோஷ்டியினர் உரத்த குரலில் பேசவேண்டுமென்னோ அல்லது நான் இரைச்சலுடன் பேசவேண்டுமென்றோ விரும்பவில்லை. நாங்கள் மிகவும் அமைதியாகவே நடவடிக்கைகளை நடத்துவோம். உங்கள் எல்லோருக்கும் அது கேட்குமென நாங்கள் நம்புகிறோம்.

பின்பு திரு. பொன்னம்பலம் விசாரணைச் சபையினருக்குத் தூது கோஷ்டியினரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஸோல்பெரிபிரபு:— நீங்கள் விசாரணைச் சபையினருக்குச் சமர்ப்பித்துள்ள மிக விரிவானதும், மெச்சத்தக்கதுமான மகஜரில் கண்டுள்ள சில விஷயங்கள் குறித்து சம்வாதிக்க விரும்புகிறோம்.

திரு. பொன்னம்பலம்:— விசாரணை ஆரம்பமாவதற்குமுன், விசாரணைச் சபையினர் வரவை அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸின் சார்பாகவும், பொதுவாக எல்லாத் தமிழ்மக்களின் சார்பாகவும் வரவேற்கிறேன். எங்களை வேண்டுகோளுக்கிணங்க விசாரணைச் சபையினரை அனுப்பிவைத்ததற்காக எங்கள் நன்றியைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும்படி நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம். 10 வருஷங்களுக்கொருதடவை விசாரணைச்சபைகள் இங்கு வந்துகொண்டிருக்குமென நம்புகிறோம்.

புதிய அரசியற்றிட்டத்தில் ஸ்தானங்களை ஒதுக்குவது சம்பந்தமாக திரு.பொன்னம்பலம் கூறியதாவது:

"50-க்கு 50 கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டால் அதனால் எல்லாச் சிறுபான்மையோருக்கும் முக்கியமாக வட கிழ் மாகாணங்களிலுள்ள தமிழர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பிரதிநிதித்துவம் கிடைக்கும். பிரதேசம், சமூகக் கொள்கை ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே எங்கள் பிரதிநிதித்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் திட்டத்திலே கூறியுள்ள பிரதிநிதித்துவ முறைப்படி எல்லோருக்கும் அதிகமான பாதுகாப்புக் கிடைப்பதோடு இதுவரை இருந்துவரும் குறைகளும் நீங்கும். உதாரணமாக இத்திட்டப்படி தென் மாகாணத்திலுள்ள 21000 முஸ்லீம்களுக்கு ஒரு தனி ஸ்தானம் கிடைக்கும். மற்றிரண்டு திட்டப்படி இந்த உரிமை அவர்களுக்குக் கிடைக்காது. அதிக ஜனத்தொகை உள்ள மாகாணங்களுக்குக் குறைவான ஸ்தானங்களும், குறைவான ஜனத்தொகையுள்ள மாகாணங்களுக்கு அதிகமான ஸ்தானங்களும் அளிக்க மற்றிரண்டு முயற்சிக்கின்றன.

இன்று தொகுதிப் பிரதிநிதித்துவம் எனக் கூறப்படுவது ஒருவகையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே. உதாரணமாக மேல்மாகாணம் தெரிவு [illegible] சிங்களவர்களாக [illegible] ணங்களை [illegible]கும். மத்திய மாகாணத்தில் அதிகமாகத் தமிழர் இருந்தபோதிலும் சிங்களவரே தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கெல்லாம் ஒரு விதிவிலக்கு காலஞ்சென்ற மிஸ்டர் பிரீமனே! அதுமாதிரிச் சம்பவம் இன்னும் 100 வருடங்களுக்கு நடக்காது. ஆகையால் ஒரு தொகுதியிலிருந்து அத்தொகுதியில் அதிகப்படியாக உள்ள சமூகத்தைச் சேர்ந்தவரே தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதே உண்மை. முன்பு டொனமூர் விசாரணைச் சபையினர்முன் சாட்சியமளித்த இலங்கை அறநேரணி ஜெனரல் மிஸ்டர் எல்பின்ஸ்டன், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் சமூகங்களிடையே மனக்கசப்பு உண்டாகுமா என்று கேட்டதற்கு உண்டாகாது என்றார்.

அரசியல் சீர்திருத்தத் திட்டத்திலேயே சிங்களவரையும் மற்றையோரையும் பிரித்துவைக்கும் அம்சங்கள் அதிகமாக விருக்கின்றன. அரசாங்கசபையில் சில பிரேரணைகள் பெருவாரியான சிங்கள வாக்குக்களால் நிறைவேறி விடுகின்றன. அச்சமயம் சிறுபான்மையோர் வீட்டிலேயே இருந்து விடலாம்; சபையில் வந்திருந்தும் பயனில்லை.

சிறுபான்மையோருக்குச் சட்டசபையில் குறைந்தபட்சம் 100-க்கு 50 ஸ்தானங்கள் ஒதுக்கப்படவேண்டும், இந்த ஸ்தானங்களை அவ்வத் தொகுதிகளிலுள்ள சம்பந்தப்பட்ட வகுப்புகளுக்கு மாத்திரம் இருக்க வேண்டும். பாக்கியுள்ள 50 ஸ்தானங்களுக்கும் பொதுத் தொகுதி முறைப்படி தேர்தல் நடத்தவேண்டும். அங்கு சிங்களவரே மிக அதிகப்படியாக விருப்பதால் அவர்களே வெற்றிபெறுவர். முன்பு நடந்த பொதுத் தேர்தல்களிலும் 100-க்கு 66 வீதம் ஜனத்தொகையுள்ள சிங்களவர் 100-க்கு 78 வீதம் ஸ்தானங்களைப் பெற்றிருக்கின்றனர். இதனால் பெரும்பான்மைச்சமூகத்துக்கு அதிகப்படியான விசேஷ பிரதிநிதித்துவம் கிடைக்க முடிந்தது. உலகத்திலேயே இந்த மாதிரி எங்குமே இருக்கமுடியாதென்றே நம்புகிறோம்."

மேலும் திரு. பொன்னம்பலம் கூறியதாவது: "இப்போது தெரிவு செய்யப்பட்ட அங்கத்தினர்கள் கல்வி முதலிய யோக்கியதாம்சங்களைப் பொறுத்தவரை தரம் குறைந்துளளது. சிறுபான்மையோர் எல்லோரும் எப்போதும் சேர்ந்து கூட்டாக வாக்களிக்க வேண்டுமென்ற அவசியமில்லை, ஆனால் சிங்களத் தமிழ் அரசாங்க பாஷையாகச் செய்ய முயற்சி நடந்தால், அப்போது சிறுபான்மையோர் ஒன்றுசேரவேண்டியிருக்கும். 50-க்கு 50 யோசனை இவ்விஷயங்களில் மேற்சதனுள்ள, வேறு சமூகங்களுக்கும் பாதுகாப்பளிக்கும். ஒரு சமூகம் ஆதிக்கம் வகிக்க முயலுவதைத் தடுக்கும்."

[illegible]ர்த் திட்டம் வகுப்புவா[illegible] [illegible]ளைகளை நீக்குவது. ஆந்தக் கொள்கைக்குப் புராதன ஆதாரவு எதுவுமில்லையென்றும் கூறப்பட்டது. அது பெருந் தவறு. 1837-ம் வருடம்முதல் 1931-ம் வருடம்வரை பிரதிநிதித்துவமெல்லாம் வகுப்புவாரிக் கொள்கைமீதே இருந்துள்ளது.

சீமையிலுள்ள நிலைமைக்கும் இலங்கை நிலைமைக்கும் மிகுந்த வித்தியாசமுண்டு.

படித்தோர் தொகுதிக்கு ஸேர். இராமநாதன் தெரிவு செய்யப்பட்டதுண்மையே! ஆனால் அந்தத் தொகுதி வாக்காளர் எண்ணிக்கையைப் பார்த்தால் தமிழரும் சிங்களவரும் சரிசமமாக விருந்தது விளங்கும். ஜாதி மத வித்தியாசமின்றி பிரஸ்தாப திட்டப்படி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவார்களென்று டொனமூர் கமிஷனர்கள் நம்பியது பொய்த்துவிட்டது"

"இலங்கையை போன்ற நாட்டில் இங்கிலீஷ் பார்லிமென்டரி முறையை அப்படியே காப்பியடித்துவைப்பது முடியாது. ஒரு சிங்கள தொகுதியில டாக்டர் கலீல தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அது விஷமத்தனமான கூற்று. உண்மையென்னவெனில டாக்டர் கலீலுக்குப் போட்டியாக

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

## பாகவதர், கிருஷ்ணன் மீண்டும் கைது செய்யப்பட்டனர்

பிரபல சினிமா நடிகர்களான திருவாளர்கள் எம். கே. தியாகராஜ பாகவதரும், என். எஸ். கிருஷ்ணனும் மீண்டும் கைது செய்யப்பட வேண்டுமென்றும், அவர்கள்மீது கொண்டுவரப்பட்டிருக்கும் குற்றச் சாட்டுகள்மீது விசாரணை நடைபெறும்வரையிலாவது அல்லது நீதிஸ்தலத்தின் மறு உத்தரவு வரையிலாவது அவர்கள் காவலில் வைக்கப்பட வேண்டுமென்றும் சென்னை உயர்தர நீதிஸ்தலத்தில் நீதிபதி பையர்ஸ் நேற்று உத்தரவிட்டார்.

திரு. லெக்ஷ்மிகாந்தன் கொலை சம்பந்தமாக இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு உயர்தர நீதிமன்றத்தில் முன்பு பிணையில விடப்பட்டனர். இவர்களுடைய பிணையின் விடுதலையை நீக்கவேண்டுமென்று பொலிஸார் கேட்டதற்கிணங்க நீதிபதி பையர்ஸ் உத்தரவிட்டிருக்கிறார்.

இக்கொலை சம்பந்தமாகக் கைதியான திரு. எம். ஸ்ரீராமுலுநாயுடுவின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை விடுதலை மனுவை நீதிபதி பையர்ஸ் நிராகரித்தார்.

உயர்தர நீதிஸ்தலத்தின் உத்தரவு வெளியானதும் ஸ்ரீ தியாகராஜ பாகவதர் தலைமை மாகாண நீதிபதி முன்பு வெளிப்பட்டார். நீதிபதி அவரை 19-ந் திகதிவரை விளக்க மறியலில வைக்க உத்தரவிட்டார். பாகவதர் விசேஷ வகுப்பு விசாரணைக் கைதியாக நடத்தப்படுவார்.

கீழ்ப்பாக்கத்திலுள்ள வாசஸ்தலத்தில் என். எஸ். கிருஷ்ணனைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஞு
மாசிமீ அஉ திங்கட்கிழமை

## ருஷியர்மீது சந்தேகமா?

பரந்த வனாந்தரத்திலேனும் பெரியதாகிய கடலிலேனும் பிரயாணம் பண்ணும்போது வனாந்தரத்தின் மத்தியிலும் கடலின் நடுவிலும் போகும் பிரயாணிகளுக்கு முறையே ஆகாயமானது பூமியிலும் சமுத்திரத்திலும் முட்டுவதுபோலக் காணப்படுதல் இயல்பல்லவா; ஆகாயம் முட்டுமிடம் மிகவுஞ்சமீபத்திலிருப்பதுபோலவுந் தோற்றும்; ஆனாற் போகப் போக ஆகாயம் முட்டுமிடமும் அப்பாலுக் கப்பாலாகத் தோற்றும்; ஈற்றில் ஒரு கரை, இல்லையேல் துறை காண்பது நிசந்தான்; இந்தத் தோற்றம் போலவே இருக்கின்றது இப்பொழுது நிகழும் யுத்தமும்; உலகத்தவருட் பெரும்பாலார் ருஷியர் ஒருபுறத்தும் பிரித்தானிய அமெரிக்கர் ஏனைய புறங்களிலும் ஜர்மனியரை அடித்து ஒருவாறு ஒதுக்குவதனால் அயிரோப்பா யுத்தம் விரைவில் முடிவடைதல் கூடுமென்றும், பின்னும் சிலகாலஞ்செல்ல ஐக்கியராச்சியத்தினர் ஒருங்கு சேர்ந்து யப்பானியரையும் தோல்வியுறச் செய்து உலக சமாதானத்தை ஆக்கிவிடுதல கூடுமென்றும நினைக்கிறார்கள். முன்னிப் பலர் பலமுறை யுத்தமுடிவிற்குப் பலவாறு காலவெல்லை விதித்து அவர்கள் கூறிய காலத்திலே யுத்தம் முடியாமல் இன்றும் நடைபெறுவதனால், இப்பொழுது யுத்தகால எல்லை நிச்சயிக்க முற்படுகின்றிலர். யுத்தம் முடியுங் காலத்தைச் சர்வவல்லமையுள்ளகடவுளொருவரே யறிவாரென்று சொல்லிவிட்டால் அந்தச் சொல் பிழைபடாது.

விஷயம் இப்படியிருக்க, இப்பொழுது அமெரிக்க பிருத்தானிய அரசதந்திரிகளுள்ளுஞ் சிலர் ருஷியரின் நோக்கத்தையிட்டுச் சந்தேகப் படுகின்றனர்; வேறு சிலர் முக்கூட்டினருள்ளும் ருஷியரே இந்தநேரத்தில் படைவலி யுத்த முயற்சி யென்னுமிவைகளில் மேம்பட்டிருத்தலினாலும் துரிதமாக ஜர்மனியரைச் செயித்து அவர் நாட்டுட் பிரவேசித்துத் தலைநகரிலுந் தாவ ஆயத்தமாய் நிற்றலினாலும் ருஷியரின் ஆண்மையையும் அதிகாரத்தையும் வெற்றிப்பாட்டையுமிட்டுப் பயப்படுகின்றனர். சிலர் ருஷியரின் வெற்றிப்பாட்டினால் மேலும் மேலும் யுத்தம் விளையுமென்றும் ருஷியர் தம் அதிகாரத்தை உலகெங்கும பரப்ப முயல்வரென்றும் வெளிப்படையாகச் சொல்லத் தொடங்கிவிட்டனர். இங்ஙனஞ் சொல்வோருட் சிலருடைய கூற்றை மாத்திரம் இங்கே யெடுத்துக் காட்டுகின்றோம்.

"ஜர்மனியர்தோல்வியுறுவதும் ஹிட்லர் மாள்வதுந் திண்ணம். ருஷியர் ஜர்மனியுட் போகும் போக்கைத் தடுக்க இனி எவராலும் முடியாது; கீழ்த்திசையினாலும் மேற்றிசையினாலும் ஜர்மனியருக்கு முடிவு காணச் சைநியங்கள் சென்று தாக்கலாயின; ஜர்மனிய நாட்டில் இப்பொழுது நின்று சமர்புரியும் ருஷியப்படையைவிட இன்னும் அதிகமான படை ஆயுதபலத்தோடு ருஷியர் பொறுப்பிலுள்ளன; இந்தநேரத்தில் உலகத்திலே படைவலியால் மேம்பட்டவர் ருஷியரென்றே சொல்லக்கிடக்கின்றது; "ஸோவியற்" கொள்கை ருஷியநாடு முழுவதும் பரப்பப்படலாயிற்று. பதினேழுகோடி சனங்கள் ஒரே கொள்கையினர் ஒரே நோக்கத்தினர் ஒரு கட்சியினராக ஐக்கியப்பட்டுக் கருமமாற்றத் தலைப்பட்டால் அவரைத் தடுத்தல் சாத்தியமானதல்ல; இப்பொழுது நாம்பார்க்கும்போது ஜர்மனியரை வென்று ஜர்மனிய நாட்டை ருஷியர் கைப்பற்ற யுத்தஞ் செய்வது போல எமக்குப் புலப்படுகின்றது; ஆனால் உற்று யோசித்துப் பார்த்தாற்றான் உண்மை தெரியும்; இப்பொழுது ருஷியர் செய்யும் யுத்தம் பேர்லின் நகரைக் கைப்பற்றுவதற்கென்று நாங்கள் எண்ணிக்கொள்ளுகிறோம்; இந்த யுத்தம் உண்மையில் பேர்லினைத்தாக்கவில்லை; அயிரோப்பாக் கண்டத்தின் இருதயத்திற் குற்றுவதாகும்; நாசிக் கொள்கை யொழிந்துவிட்டால் சோவியற் கொள்கை எங்கும் பரவும்......" என "ஹிந்துஸ்தான் ரயிம்ஸ்" என்னும் பத்திரிகையில் லண்டன் நிருபர் முறையிடுகின்றாராம். இவை மாத்திரமல்லாமல் குறித்த லண்டன் நிருபர் ருஷியாவை யிட்டு இன்னுஞ் சில தெரிவிக்கின்றார்:- "சோவியற் ருஷியர் தம் நாடுகளையெல்லாம் ஒருங்கு தம் அதிகாரத்துட்படுத்தும் முறையில், லற்வியா, எஸ்ரோனியா, லிதுவேனியா, போலன்ட், றூமேனியா, ஹங்கேரி, செயிக்கோஸிலேவியா என்னு மிவைகளைத் தம் ஆதிக்கத்துட் சேர்த்துக்கொள்வாராயினர்; இவைகளையெல்லாம் பறிகொடுத்து இனி ஜர்மனியர் ஒரு சாதியென வாழுதல் முடியாது; ருஷியர் நாடுகளைத் தம் ஆதிக்கத்துட்சேர்க்கும் முயற்சிக்கு எச்சாதியினர் எவ்விராச்சியத்தினர் இடையூறாக நிற்க முயலினும் அவர்களை நசித்துவிட முயல்வர் போலும். பிருத்தானியருக்கும் பிரான்ஸியருக்கும் ஏனைய அயிரோப்பிய ராச்சியத்தினருக்கும் முந்தி ஜர்மனி ஒரு அரணாக விருந்ததெனலாம். அதனாலே ருஷியர் ஏதுஞ் செய்ய முடியாமலிருந்தனராம்..."

இனி, ருஷியர் கொள்கைக்கு எப்பொழுதும் மாறாகவுள்ள பெல்வோர்ட் டியூக் பிரபு ருஷியருடைய முனைப்பையிட்டுச்சொல்லும்போது 'ருஷியருடன் சேர்ந்து யுத்தஞ் செய்து வருவதாற் பிறகு பெருங் கேடுண்டாகக்கூடும்; நாங்கள் போலன் நாட்டினை ஹிட்லர் கைப்பற்றிக்கொள்ளாது பாதுகாப்பதற்காகத்தான் முந்தி ஜர்மனியருடன் யுத்தஞ் செய்யப் போனோம்; ஆனால் ஹிட்லர் கைப்பற்றியதைக் காட்டிலும் அந்நாட்டிற் கூடிய பாகத்தை இப்பொழுது ருஷியர் கைப்பற்றிவிட்டனர்...' என்கிறார். மேலும் முப்பெரியார் ஒருங்குசேர்ந்து ஆலோசித்த நிர்ணயங்கள் சில, இப்பொழுது ஜர்மனியரிடமிருந்து மீட்கப்பட்ட போலன்ட் நாட்டினருக்குச் சம்மதமாகவில்லையென்பது அந்த நாட்டின் மந்திரி சொல்பவற்றால் அறியக் கிடக்கின்றது; "முப்பெரியார் சேர்ந்து செய்த நிர்ணயங்கள் சில போலன்டினராகிய எங்களுக்கு மிகவும் மாறானவை; நாங்கள் ஒருகாலத்தும் ஏனைய சாதியினர்க்கு அடிமைகளாய்க் காலங்கழிக்க ஒருப்படமாட்டோம்"; கனடாவின் அரசதந்திரியாகிய றென்னி சாலொல்ற் என்பவர் சொல்வது: 'போலன்டின் கௌரவத்தைக் காப்பதற்காகவே கனடியராகிய நாங்கள் யுத்தத்திற் சேர்ந்தோம்; பிருத்தானிய நலன்தான் எங்களுக்குப் பிரதானமானது; ஆனால் இப்பொழுது நிலை மாறிவிட்டது; ருஷியர் போலன்டிற் பாதியையும் பால்ரிக் நாடுகளுள் மூன்றினையும் தாங்கள் விழுங்கி விட்டனர்; ஆனால் எங்கள்பேர்பெற்ற ஏனைய ஐக்கிய ராச்சியத்தினர் இருவரும் அதாவது மிஸ்ரர். சேர்ஜிலும் மிஸ்ரர். றூஸ்வெல்ற்றும் இவ்விஷயத்தில் ருஷியருடன் யாதும் பேச முடியாதவர்களாய் மௌனஞ் சாதிக்கின்றனர். ஜர்மனியர் முந்தி அவுஸ்திரியாவையும் சுடற்றின்லந்தையும் டான்ஸிக்கையும் கைப்பற்றியபோது அது பெரிய குற்றமென்று சொல்லப்பட்டது; இப்பொழுது ருஷியர் லிதுவேனியாவையும் எஸ்தோனியாவையும் போலன்டிற் பெரும் பாகத்தையும் பிடித்தபோது எல்லாரும் மௌனஞ்சாதிக்கின்றனர்; இது என்ன விபரீதம்."

இப்படி ருஷியரின் வெற்றிப்பாட்டைப்பற்றிப் பிருத்தானிய அமெரிக்க ராசதந்திரிகளும் ஏனைய ராச்சியத்தினர் சிலரும் அஞ்சுகின்றனர்; இப்பொழுது உலகத்திலே படைவலியாலும் அதிகாரத்தாலும் மேம்பட்டிருப்போர் ருஷியரென்றும், ருஷியர் மாறுபட்டால் அவர்களை வெல்வது கஷ்டமென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். ருஷியரும் பிருத்தானியரும் அமெரிக்கரும் மாறுபடாமலிருப்பதேவிரும்பத்தக்கது. ஒருபோது ருஷியர் தாம் காலகதியில் மாறுபட்டுக் கருமம் ஆற்றத் தொடங்கினாலும், பிருத்தானியருக்கும் அமெரிக்கருக்கு மிடையே ஐக்கியம் நிலைநிற்குமாயின் ருஷியர் இவர்களை ஏதுஞ் செய்ய முடியுமோ என்பது சந்தேகம்.

---

தந்திச் சமாசாரம்

### அமெரிக்க ஆகாயப்படை ரோக்கியோவைத் தாக்குகின்றன

ஐக்கிய ராச்சியத்தினர் படையெடுத்துவருவரென யப்பானியர் எதிர்பார்க்கின்றனர்

17-2-44

யப்பானியர் கூற்று:

"பகைவருடைய ஆகாய விமானங்கள் சன்ரொப் பெரும்பிரிவின் மீதும் சுக்கோமீதும் இடையறாது வெடிகுண்டுகளைப் பெய்தன. யப்பான் நாட்டின்மேற் பகைவருக்குரிய ஆகாயப்படை தொடர்பாக வருகின்றன. இவைகள் பகைவருடைய கப்பல்கள் வாயிலாகவே யப்பானிய கரைக் கணித்தாகக் கொண்டுவரப்படலாயின. பத்திற்கு மேற்பட்ட ஆகாயப்படை சுமக்கும் பகைவர் கப்பல்கள் வந்துள்ளன. யப்பானிய மக்கள் திகிற்ப்படுதலின்றிப் பகைவர் ஆகாயப் படையின் செயலை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். யப்பான்மீது படையெடுத்தல் பகைவருடைய நோக்கம்போலும்: போர்மோசாத் தீவிலும் யப்பானிய தீவுகளிலும் ஐக்கிய ராச்சியத்தினர்க்குரிய ஆகாயப் படைகள் குண்டு பெய்து தாக்குகின்றன."

---

### கோட்டைத் தீவைத் தாக்க முயற்சி

பகைவர் ஐவொஜிமா என்னும் கோட்டைத் தீவைத் தாக்கும்படி இறங்க முயன்றபோது தாங்கள் தடுத்துவிட்டதாகவும், கொஸிஜடோர் தீவிலே பகைவர் நேற்றுப் படைகளுடன் புகுந்துவிட்டனரெனவும் ஜப்பானியர் கூறுகின்றனர்.

---

### பிரான்ஸ்—இத்தலிய எல்லைப்புறத்தில் தாக்குதல்

ஜெர்மனியர்வசமுள்ள பிரான்ஸ்-இத்தலிய எல்லைப்புறத்தை பிருத்தானிய கடற்படையும அமெரிக்கக் கடற்படையும் தாக்கினவாம்!

---

### அம்மைநோய்

பருத்தித்துறை, கோப்பாய், பரணத்துறை யென்னு மூர்களில் மூவருக்கு அம்மைநோய் கண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பருத்தித்துறையில் அம்மைநோய் கண்டவர் பரிகாரம் செய்யாது ஓடிப்போயிருக்கிறாராம்.

---

### ஸ்ரீபஞ்சாக்ஷரமந்திரசெபம்

பிரமஸ்ரீ, ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்

(முற்றொடர்)

ஸ்ரீபஞ்சாக்ஷர மந்திரத்தைச் செபஞ் செய்பவர்கள் எவர்களோ அவர்கள் ஏகமனமுடையவர்களாய் இருப்பதற்காக ஏகாந்தமான ஒரு அறையிலே மன அடக்கத்திற்காக மிகுந்த பரிமளமுள்ள வஸ்துக்களை வைத்து அதில் வேறொருவரும் உட்பிரவேசிக்காதபடி நியமித்துச் செபஞ் செய்வதற்காக ஒரு பெரிய பலகையின்மேல் புலித்தோல் அல்லது மான்றோலை வைத்து அதன் மேல் அபானவாயு படாவண்ணம் ஒரு வெள்ளைச் சவுக்கத்துண்டை மடித்து விரித்து அதில உட்கார்ந்து இடுப்பு கூன் வளையாமல் சித்திரப் பாவை போலச் சரியாய் நிறுத்தி முகத்தை நிமிர்த்தி நோக்கி இருதனங்களும் மிந்து நனிபெய் பாராத வண்ணமாய் இருந்து கொண்டே செபஞ் செய்தல் வேண்டும். செபஞ் செய்யும பொழுது யந்திரத்தை, தங்கத்தகடு அல்லது தளப்பதந்தோலை, விபூதி, சந்தனம் இவற்றிலே தேன் ஒன்றி லெழுதி வாசனைத் திரவியங்கள் சுகந்த புஷ்பம் தூபம கற்பூரம் இவற்றைக்காட்டி இயன்றளவு செபஞ்செய்து வருவார்களேயானால் இகத்தில வேண்டிய பெருபேறுகளையும், இறந்ததன் மேல் மோக்ஷத்தையும அடைவார்கள்.

நடுவிலிருக்கும் 'ய' காரம் சீவன். இந்த 'ய' என்னும் எழுத்தின் இருபக்கத்திலுமுள்ள காலகள் உச்சுவாச நிச்சுவாசங்களாகும். அந்த உச்சுவாச நிச்சுவாசங்களை 'ய' என்னும சீவன் உள்ளுக்கும வெளிக்கும இழுத்துக்கொண்டு இருக்கிறதென்று அறிந்து கொள்க.

'ய' என்னும் எழுத்தி னடுவிலிருக்கும் கால் பூசகுத்தண்டு. அதன் வலது இடது பக்கங்களிலுமுள்ள மூக்கின் சூக்ஷ்மநாடிகள் [சூரியநாடி] சக்தி [சந்திரநாடி] கள் நடக்கும்படியான வழிகள். இந்த வழியாய் 'ய' என்னும சீவாக்ஷரத்தை நீக்கி 'ம' என்னும மந்திரத்தைச் சுவாசத்துடன் உள்ளுக்கு இழுத்துச் சுவாசம் வெளிவிடாமல் சிலநேரம் 'ஓம்' என்று மனதினால் நினைத்து மறுபடியும் சுவாசம் வெளியில் விடும்பொழுது சிவ என்னும் மந்திரத்துடன் வெளியில் விட வேண்டும்.

தொடரும்.

---

விவாகம்

### கனகசபாபதி—மங்கையர்க்கரசி அம்மாள்

கொழும்பு (Information Dept) அரசாங்க சமாசாரப் பகுதியில் வேலையில் அமர்ந்திருக்கும் திருவளர்செல்வன் ச. கனகசபாபதி அவர்கட்கும், பருத்தித்துறை புலோலி மேற்கு வாசியும் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியருமான திரு. M. a. செல்லையா அவர்களின் சிரேஷ்ட புதல்வி திருவளர்செல்வி மங்கையர்க்கரசி அம்மாளுக்கும் நிகழும் தாரணஞு தைமீ 26உ (8-2-45) வியாழக்கிழமை இரவு 10-35 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மணமகன் இல்லத்தில் விவாகம் விதிப்படி சிறப்பாக நிறைவேறியது. அநேக பிரபலஸ்தர்களும் உற்றார் உறவினர்களும் சமுகமளித்துத் தம்பதிகளை ஆசீர்வதித்தனர். தம்பதிகள் சகல ஐசுவரியங்களும் பெற்று இன்புற்று இனிது வாழும்வண்ணம் இறைவன் திருவருள்புரிவாராக!

இவ் விவாக சோபனத்தில் இந்துசாதனப் பத்திரிகைக்குத் தானமாக வரித்த ரூப்பிய ரூபா 2 வரப்பெற்றோம்.

மனேஜர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் தமிழகமும்

வித்துவான் பண்டிதர், திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், B. O. L.

கொழும்புத் தமிழ்க் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்

மக்களுடைய நாகரிக முதிர்ச்சிக்கும் சிறப்பிற்கும் காரணமாய் விளங்குவது கல்வியே. கற்றவர்களுக்கு மாத்திரமன்றி, அவர்களுடைய சாதிக்கும், அவர்கள் வாழும் நாட்டிற்கும் ஒப்புயர்வற்ற பெருமையைக் கொடுப்பதும் அஃதே. சுருங்கக் கூறின் 'ஒரு நாட்டின் உயிர் கல்வியே'யெனலாம். இதனாலேயே இக்காலத்தில் பல துறைகளிலும் முன்னேற்றத்தை அடைய விரும்பும் நாடுகள் கல்வியை மிகப் போற்றி வளர்க்கின்றன. கல்வியாற் பெறத்தக்க பயன் முழுவதையும் பெற முயல்கின்றன. இம்முயற்சி இப்பொழுது உலகமெங்கும் பரவிக் கல்வியைப் பல துறைகளிலும் சீர்திருத்தி அமைத்தாற்றான் அதனால் பெரும் பயன் அடையலாம் எனும் முடிவைப் பிறப்பித்திருக்கின்றது. பல நாடுகள் கல்வியுலகில் சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்யத் தொடங்கிவிட்டன. நாங்கள் தாயகமாகிய இலங்கையிலும் இப்பொழுது எங்கே பார்த்தாலும் கல்வியையும் கல்வி நிருவாகசபையார் அமைத்த கல்வி அறிக்கையையும் பற்றிய பேச்சுக்கள், கட்டுரைகள், சம்பாஷணைகளே காணப்படுகின்றன. இம்முயற்சிகள் யாவும் விழுமிய பயனை அளிப்பனவாகுக; உலகத்திலுள்ள மக்கட் பகுப்பினரின் நாகரிகங்களுள் மிகப் பழையதும் சிறந்ததுமான நாகரிகத்தையுடைய தமிழகத்தில் கல்வியை எப்படிப் போற்றினர், எவ்வாறு கற்றனர், எவ்வெப் பயன்களைப் பெற்றனர் என்பவற்றை அறிதலும் இன்றியமையாதது. ஆதலினால் இவற்றைப்பற்றிச் சற்று ஆராய்வாம்.

## பழமையும் புதுமையும்

"பழம் பெருமையை உடையேம், பல தமிழ் நூல்களை உடையேம்" என்று ஓயா பல்லவியைப் பாடுவதில் என்ன இருக்கிறது எனும் வெறுப்புடன் கூடிய கருத்துச் சில தமிழ் மக்களிடையே—தமிழ் நாட்டில் [illegible] சில தினப் பத்திரிகைகளைச் [illegible] படிப்பவர்களிடையே அதிகமாக—காணப்படுகிறது. ஆங்கிலம் மாத்திரம் கற்றவர்களும் இதனை உண்மையென எண்ணிப் பிதற்றவும் தொடங்குகின்றனர். "தொல்காப்பியமாம் திருக்குறளாம் ......இவற்றையெல்லாம் வைத்துக் கட்டியழுவதால் என்ன வரப்போகிறது" என்று சில (தமிழ்) மக்கள் கூறுகிறார்கள்; வருந்துகிறார்கள்; [illegible]. சிலருக்குப் பழமை என்றவுடனே வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது. 'புதுமைப் பித்து'ப் பிடித்துவிடுகிறது. 'பழமையினின்றே புதுமை'; பழமையும் புதுமையும் தான் ஒரு சாதிக்குத் தோற்றம் அளிப்பன. பழம்பெருமையும், அப்பெருமையைக் காப்பாற்ற வேண்டுமெனும் நோக்கமும், அதனைப் போலச் சிறப்பானவற்றை இன்னும் செய்து புகழ் சிறப்புக்களைப் பெருக்க வேண்டுமெனும் ஆசையுமே ஒரு சாதியை ஆக்குவன என அறிஞர்கள் கூறுவனவற்றைப் புதுமைப் பித்தர்கள் நன்கு அறிய வேண்டும். ரெனன் (Renan) எனும் பேரறிஞர் கூறுவதை நோக்குங்கள்.

"A nation is a living soul, ... two things constitute this soul: One is in the *past*, the other in the present: One is the common possession of a rich *heritage of memories*: the other is the actual consent, the desire to live together the will to preserve worthily the undivided inheritance. To have common glories in the past, a common will in the present to have done great things together, to will to do the like again—such are the essential conditions for the sending of a people.

தமிழ்ச் சாதியாரின் பழம் பெருமை கல்வியில் மாத்திரமன்று; வீரம், காதல், ஒழுக்கம், கடவுட்கொள்கை, அரசியல், உழவு, வாணிபம் முதலிய பல துறைகளிலும் பரந்து சிறந்து விளங்குகிறது. ஒரு சாதியின் உயிருக்கும் அதன் பெரும் புலமைக்கும் உறைவிடமாயிருப்பது அச்சாதியினரின் மொழியே என்று "கார்லைல்" (Carlyle) எனும் ஆங்கில அறிஞர் கூறுகிறார்.

பழமையிலும், அமைப்பு முறையின் நுட்பத்திலும், இலக்கியவளத்திலும் பிறவற்றிலும் எங்கள் தமிழ் மொழிக்கு இணையான மொழிகள் இவ்வுலகில் எத்தனை உள? ஆனால், அன்பர்களே! இப்பொழுது புதுச் சிறப்புக்களைப் பெருக்கிக் கொள்வதற்குப் போதிய அறிவுடை மக்களின்றி—பழம் பெருமையை அறிந்து வியந்து அதிற் படிந்து அதற்கேற்பப் புது ஆக்கங்களை ஈட்டிக் கொடுக்கத்தக்க பெரியார் பலரின்றி—எங்கள் மொழி தயங்குகிறது; நாணமடைகிறது. தாய்மொழியாகிய தமிழை நன்கு கல்லாதவர்கள் கற்றவர்களாகக் கருதப்படத் தக்கவர்களா? 'ஹாவாட்' சர்வகலாசாலைத் தலைவராகப் பல காலம் தொண்டாற்றிப் பெருமை பெற்ற சார்ல்ஸ், ஈ. எலியற் எனும் பெரியார் "தாய்மொழியை நன்கு நுட்பமாகவும் தெளிவாகவும் உபயோகிக்கத் தக்க ஆற்றலே ஒவ்வொருவருடைய கல்வியினதும் இன்றியமையாத ஒரு பகுதியாகும்" என்று கூறுவதைச் சிந்தித்து உணர்ந்து பாருங்கள்.

(I recognize but one mental acquisition as a necessary part of the education of a lady or gentleman, namely an accurate and refined use of the mother tongue" says Charles E. Eliot President, Harvard University)

நமது தாய்மொழியை நன்கு கற்று, நம் மொழி, சாதி, சமயம், நாகரிகம் முதலியவற்றின் பெருமையை அறியாமலிருப்பவர்கள் உண்மைத்தமிழரா? இல்லை, இல்லை; என்று யாவரும் கூறுவர். இவர்கள் சாதி தமிழரன்று; 'நாமது தமிழர்', "நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்தல் நன்றோ" எனும் பாரதியார் கேள்விக்கு இவர்கள் இன்னும் செவி கொடுக்கவில்லை. தமிழில் நன்கு பேசுவதற்குத்தானும் இயலாது பிற மொழிகளைப் பேசி, அவற்றால் [illegible]; அவற்றின்மேல் [illegible] தமிழர்களும் இந்த இருபதாம் நூற்றாண்டில் நம்மவர்களுள் இருக்கின்றார்கள் அன்றோ?

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில், இப்படிப்பட்ட உறவு நிலைத்திருக்கும்வரை எங்கள் சாதியில் ரவீந்திரர், ரூமெயின் ரோலண்ட், பர்னாட் ஷா, உவெல்ஸ் போன்ற அறிஞர்கள் தோன்ற இடமுண்டா? தமிழ் இலக்கியத்தில் தமிழ் மக்களுக்கு எவ்வளவு ஆர்வமுண்டோ அவ்வளவுக்குத் தக்கதாக [illegible] தமிழ் இலக்கியம் பெருகும்; சிறக்கும். மதுரைமா நகரில் இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ் மக்கள் இலக்கிய நூல்கள் பலவற்றை நன்கு படித்தார்கள்; புதுப்புது நூல்களை ஆக்கித் தரும்படி புலவர்களை நெருக்கினார்கள்; உளத்தைக் கொள்ளை கொள்ளும் இளவேனிற் பருவத்தில் இலக்கியத்தை யுண்டு களித்தார்கள்; என்ற பல செய்திகளைக் கலித்தொகை எனும் நூலிற் காண்கிறோம். அவர்கள் வழிவந்த எங்களில் எத்தனைபேர் இப்பொழுது இலக்கியத்தைப் படிக்கிறோம்; சுவைக்கிறோம். பிரித்தானிய சாம்ராச்சியத்தின் சிரோமணியாக விளங்கும் இந்தியாவைப் பறிகொடுக்க விரும்பினும், சேக்ஷ்பியருடைய நாடகங்களை இழக்க ஒரு ஆங்கிலேயனாவது விரும்பான் எனக் கார்லைல் எனும் ஆங்கில அறிஞர் பெருமிதத்துடன் கூறினர். ஆனால் நாங்களோ கேவலம் ஓர் உத்தியோகத்தை மாத்திரம் விரும்பி, எங்கள் இலக்கியம் முழுவதையும் மறந்தோம்; மொழியையே விட்டுவிட்டோம். எங்களுடைய தேசாபிமானம், மொழிப்பற்று, சாதிப்பெருமை எப்படி இருக்கின்றன? அன்பர்களே! உங்கள் நிலையை உணருங்கள்; பழம் பெருமையை அறியுங்கள்; போற்றுங்கள். இனிமேல் தமிழ்மொழியைக் கற்று ஓம்பி வளர்க்க முயலுங்கள்! உங்களுக்கும் உங்கள் சாதிக்கும் புது ஆக்கம் தேடுங்கள். தமிழ்ச்சாதி, தமிழ்மொழி, தமிழ் நாகரிகம் உலகில் எதற்கும் குறைந்தனவல்ல என்பதைக் காட்டுங்கள். நிற்க,

## தொல்காப்பியத்திற்கு முன்

இப்பொழுது எமக்குக் கிடைத்திருக்கும் தமிழ் நூல்களுள் மிகப் பழையது தொல்காப்பியமே. இஃதோர் இலக்கண நூலாதலின் இதனை இயற்றுதற்கு ஆதாரமாகப் பல இலக்கிய நூல்கள் இருந்தன என்பது வெளிப்படை. இலக்கிய நூல்களேயன்றிப் பல இலக்கண நூல்களும் தொல்காப்பியத்திற்கு முன் இருந்தன என்பதைப் "பாட்டுப் பயின்றவை நாடுங்காலை" "என்மனார் புலவர்" முதலிய பல தொல்காப்பிய அடிகளால் நன்கறியலாம். ஆகவே தொல்காப்பியத்திற்கு முன்னும் தமிழ்நாட்டில் சற்றுக் குறை போகிய புலவர்கள் பலர் இருந்தனர் என்பதும் அவர்கள் பல நூல்களை இயற்றினர் என்பதும், காலப்போக்கிற் கேற்பப் புதுப்புது நூல்கள் பல எழுதப்பட்டன என்பதும், கல்வி மிகச் சிறப்பாக வளர்ந்தோங்கிய தென்பதும் நன்கு அறியப்படுகின்றன. மேலும் அக்காலத்தில் மணம் முடித்த பின்பும் ஆடவர் தம் மனைவியரை விட்டுப் பிரிந்து மூன்றாண்டுக்கு மேற்படாத காலவெல்லையில் கல்வியைப் பெற்றனர். மக்களுக்குப் பெருமையைக் கொடுப்பனவற்றுள் எல்லாம் கல்வியே முதன்மையுடையதாகக் கருதப்பட்டது என்பது,

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

எனும் தொல்காப்பியச் சூத்திரத்தால் பெறப்படுகிறது.

## தொல்காப்பியத்தின் பின்

தொல்காப்பியத்தின் பின் தோன்றிய கடைச்சங்க மருவிய நூல்களிலும் அவற்றின் பின் எழுந்த நூல்களிலும் கல்வியின் நோக்கம் சிறப்பு, பயன், கற்கும் முறை, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, ஆசிரியர் தகைமை, கற்றற்குரியன, கற்கும் பருவம் முதலிய விஷயங்கள் மிகச் சிறப்பாகவும், நுட்பமாகவும் கூறப்பட்டுள்ளன. கல்வியைப்பற்றி ஒன்றேனும் கூறாது விட்ட புலவர்கள் இல்லையெனலும் சாலும்.

## கல்வியின் சிறப்பும் நோக்கமும் பயனும்

தமிழ் மக்கள் கல்வியைக் கண்ணாகவே மதித்துப் போற்றினர். "எழுத்தும் எண்ணும் கண்ணெனத் தகும்" என்ற வாக்கியம் தமிழ் மக்கள் காலைவிட்டகல்வதில்லை. அறம் பொருள் இன்பம் வீடு எனும் உறுதிப் பொருள்கள் நான்கினையும் கொடுத்தலாலும், கவலைபேற்படும்பொழுது கைகொடுப்பதாலும், எங்கும் நல்ல புகழைப் பரப்புதலாலும் கல்வியைத் தங்கள் உயிருக்கு ஒப்பற்ற துணையாகக் கருதினர். அறியாமையாகிய நோயை நீக்குகின்ற மருந்தாகவும், சிறந்த ஆபரணமாகவும், கற்புடைப்பெண்டிராகவும், இம்மை மறுமை வீடு மூன்றினையும் சிறப்பித்தும் விளக்காகவும், அழகைக் கொடுக்கும் அரும் பொருளாகவும் எண்ணினர். எப்பொழுதும் அழியாததும், கொடுக்கக் கொடுக்கக் குறையாததும், கொடுக்கக்கொடுக்க வளர்வதும், அரசர் முதலிய எவராலும் கவரமுடியாததும், [illegible] தொடர்ந்து செல்வதுமாகிய 'கேடில் விழுச் செல்வமாக'—'நற்பொருளாக'—மதித்தனர்.

கல் எனுஞ் சொல்லின் பொருளே கல்வியின் நோக்கத்தை நன்கு புலப்படுத்தும். கல்வி என்பது தொழிற் பெயர். கல்வி நீக்குவது என்பது இதன் பொருள். எதனை? அறியாமையை. நல்லதன் நலனையும் தீயதன் தீமையும் பகுத்துணர்ந்து தீயதை நீக்கி நல்லதைக் கடைப்பிடிக்கத் (Choice of Values and ideals) தடையாக இருப்பது, அறியாமையே. இவ்வறியாமையை நீக்குவது கல்வியே. அறியாமையுடன் கூடிய மக்களை அறிவுடைய மக்களாக்குவதுதான் கல்வியின் பெரு நோக்கம். "கற்கக் கழிமடம் அஃகும்" என்பது அறநெறிச்சாரம். "மடங் கொன்று அறிவகற்றும் கல்வி" என்றார் குமரகுருபரர். கொங்கு வேளிர் எனும் சான்றோர் கல்வியைப் "பாகன்" என்று கூறுவர். யானைப்பாகன் எப்படி யானையைப் பிறர்க்கு அடங்கி நல்வழியிற் செலுத்துகின்றானோ அதுபோலவே மக்களின் மனத்தை பயிற்றி நன்னெறிப்படுத்துவதுதான் கல்வியின் செயல் எனக் (Character training).

இனிக் கல்வியின் பயன் அறிவும் ஒழுக்கமுமாகும். "கற்றபின் நிற்க அதற்குத்தக" என்று வள்ளுவர் கட்டளையிட்டார். கற்றல் வேறு கற்றறிந்து ஒழுகுதல் வேறு. கல்வியாலாம் பயனைப் பெறுதற்குக் கற்றறிந்து ஒழுகுதல் வேண்டும். இக்காலத்தில் கற்றவர்கள் பலர் உளர்; ஆனால் கற்றறிந்து ஒழுகுபவர்கள் மிகச் சிலரே. கற்றதனைப் பயன்படுத்து ஒழுகாதவர்களை "அறிவிலார்" என வள்ளுவர் பழிக்கின்றார். "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்". ஆகவே உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல் தமக்கென மாத்திரம் வாழாது பிறர்க்கும் உரியராய வாழ்க்கை, தாமின்புறுவது பிறரும் இன்புற விரும்புதல், [illegible] தால்—அன்புகலந்த தருண ஒளிரும் இன்சொற்களால்—பிறரை நல்வழிப்படுத்தல் முதலியனவே கற்றவர்க்குரிய நெறியெனச் சுருக்கிக் கூறலாம். இவையெல்லாம் கல்வியின் பயனைப் பூரணப்படுத்தவில்லை. "இப-

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோல்பெரிக் கமிஷனும் நாம் செய்யவேண்டிய முயற்சியும்

ஸ்ரீ. சு. சிவசுப்பிரமணியம்

நம்நாட்டு அரசியற் சீர்திருத்தம் சம்பந்தமாக விசாரணை செய்தற் பொருட்டு இங்கு வந்திருக்கும் சோல்பரிக் கமிஷன் விஷயத்தில் மந்திரிசபையினர் கொண்டுள்ள மனப்பான்மையையிட்டு இந்நாட்டில் பலவாறு பேசிக் கொள்கின்றனர். தமது உத்தியோகங் காரணமாக மந்திரிமார்கள் செல்வாக்கோடு கூடிய நிலைமையி லிருப்பதனாலும், கமிஷனர்கள் மேற்கொண்டுள்ள அரசியற் சீர் திருத்த விசாரணை முக்கியமானதாதலினாலும் இப்பொழுதுள்ள நிலைமையை நாம நன்கு கவனித்தல் வேண்டும்.

சோல்பரிப்பிரபுவும் அவர் சகாக்களும் மாட்டுத் தொழுவங்களையும், குளங்களையும், பாற்பட்டிகளையும் சுற்றிப் பார்வையிட்டுப் பால்கறந்து வெண்ணெய் எடுக்கும் முறைகளையெல்லாம் கவனித்த பொழுது கௌரவ திரு. டி. எஸ். சேனநாயக்க அவர்கள் அவர்கட்கு வழிகாட்டியாக நடித்ததாகக் கூறுகின்றார்கள்; அப்படிப்பட்டவர் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்தினரால் இப்பெரியார்கட்கு இடப்பட்ட அரசியல் திட்டம ஒன்றினை வகுப்பதாகிய கஷ்டமான பணியில அவர்களோடு ஒத்துழைத்து அவர்கட்குப் பக்கமதி கூறத் தவறமாட்டாரென்பதை நம்மவருட் பலர் எண்ணுகின்றனரும். திரு. சேனநாயக அவர்களின் ஆப்த சிஷ்யரான ஸேர். ஓ. ஈ. குணதிலக அவர்கள்—வேண்டிய சமயத்தில் இவ்விருவரும் ஒரேவித அபிப்பிராயத்தோடு இரு வேறு பாத்திரங்களாக நடிக்க வல்லவர்களென்பதை நாம் கூற வேண்டுவதில்லை—கமிஷனர்களோடு பரிசயம் ஏற்படுதற்கு மந்திரி சபையினர்க்கு உதவி புரிவாரென்பதை நாம் நிச்சயமாக நம்பலாம்.

அரசியல் விசாரணை சம்பந்தமாக நம்மிடையே வந்திருக்கும் இப்பெரியார்களுக்கு இடப்பட்ட கடினமான வேலையை யொட்டிச் சில குறிப்புகளை கூறுவதால பயனுண்டாகலாம். இப்பெரியார்கள் இந்நாட்டிற்கும் இங்குள்ள நிலைமைக்கும் புதியவர்களானபடியால் இலங்கையிலுள்ள உண்மைநிலைமையையும் அந்தரங்கத்தில காரியங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதையும சரிவர அறியமுடியாது போகக்கூடும், இலங்கைக்குப் புதியவராயும் இந்நாட்டு நிலைமையைச் சரிவர அறிய முடியாதவராயும் இருந்தபோது நமது பழையதேசாதிபதியாகிய ஸேர். அண்ட்ரூ கால்டிகட் அவர்கள் இத்தீவில் ஆரம்பகாலத்தில் பெற்ற அநுபவத்தைக் கொண்டு அரசியற் சீர் திருத்தம் சம்பந்தமாக மந்திரி சபையினர் தயாரித்த திட்டத்தை ஆதரித்தனரென்பதையும் நாம அறிவோம். ஸேர். அண்ட்ரூ கால்டிகட் அவர்கள் இலங்கையில நீண்டகாலம தங்கியபின்பு தமது அபிப்பிராயங்களை மாற்றினாரென்பதையும் அவரதம் பதவிக்கால முடிவில வெளியிட்ட அபிப்பிராயங்கள் ஆரம்பகாலத்தில் வெளியிட்ட அபிப்பிராயங்கட்கு நேர்மாறானவையென்பதையும் நாம் அறிவோம். இலங்கைக்குப் புதியவராயிருந்ததும் இந்நாட்டிலுள்ள நிலைமையைச் சரிவர அறியாதவராயிருந்ததுமாகிய குறைபாடுகள் சோல்பரிப் பிரபுவுக்கும் அவருடைய சகாக்களுக்கும்மாத்திரமேயன்றி வேறும் பல பெரியார்கட்கு இருந்திருக்கின்றன.

நமது பழையதேசாதிபதி தமது அறிக்கையை எழுதும்படி கேட்டுக் கொள்ளப்பட்டபொழுது அவருக்கு இலங்கையில் ஆறுமாத அனுபவமே இருந்தது. சோல்பரிப் பிரபுவின் கமிஷனர்களும் டொனமூர் பிரபுவும் அவர் சகாக்களும் செய்ததுபோலவே இந்நாட்டில் தாம் சிலவார காலத்தில் பெற்ற அநுபவத்தைக் கொண்டே தம அறிக்கையைத் தயார் செய்ய நேரிடக்கூடும்.

டொனமூர் கமிஷனரின் சிபாரிசுகள், கால்டிகட் அவர்களின் அறிக்கை ஆகிய இவ்விரண்டும் சம்பந்தப்பட்டவரையில் அவைகளில வெளியிடப்பட்ட அபிப்பிராயங்களும் அவற்றின் பயனாகத் தயாரிக்கப்பட்ட அரசியல் சீர் திருத்தம் சம்பந்தமான அறிக்கையும் நீதியற்றவை யென்பதும் அதிருப்தியானவை யென்பதும் காலங்கடந்த பின்பே தெரிய வந்தது. இப்பொழுது நம்மிடையே வந்திருக்கும் பெரியார்களும் அப்படிப்பட்ட ஓர் கஷ்டமான நிலைமையிலேயே இருக்கின்றனர்; சிலவார காலத்திற்கு மாத்திரம இலங்கையில் தங்கி விசாரணை செய்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அவர்கள் பணிக்கப்பட்டிருக்கின்றனர்.

இச் சந்தர்ப்பத்திற்கும் முந்திய சந்தர்ப்பங்களுக்கு மிடையே மிகவும் முக்கியமான ஓர்பெரிய வேறுபாடு காணப்படுகின்றது; இச்சந்தர்ப்பத்திலே மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கத்தினர் வெளியிட்ட அறிக்கையானது சைநியப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், வெளிநாட்டு வியாபாரம், பண விவகாரங்கள் ஆகிய இவையொழிந்த ஏனைய உள்நாட்டு விஷயங்களில் இலங்கைக்குப் பூரண சுயாட்சி வழங்குவதாகக் கூறுகின்றது. சோல்பரிப் பிரபுவும் அவருடைய சகாக்களும் வெளியிடும அறிக்கையின்பலனாக ஏற்படும் தீர்ப்பு முடிவானதாகவும் மாற்ற முடியாததாகவும அமையக்கூடும்; அதுவுமன்றிப் பிரித்தானிய அரசினர் இச்சந்தர்ப்பத்தில அனுப்பியதுபோல இனி வருங்காலத்தே இலங்கைக்கு அரசியல விசாரணைக் கமிஷனர்களை அனுப்பாது விடவுங்கூடும். டொனமூர் கமிஷனர்களும ஸேர். அண்ட்ரூ கால்டிகட் அவர்களும சம்பந்தப்பட்ட வரையில அவர்களது அறிக்கைகளின் பலனாக இப்படிப்பட்ட முடிவான தீர்ப்பு ஏற்படவில்லை.

டொனமூர் கமிஷனர்களின் நோக்கம இலங்கையில வகுப்புவாதத்தை ஒழிக்கவேண்டுமென்பதும் இலங்கை வாசிகள் எல்லோருக்குமே அதிகாரத்தை அளிக்க வேண்டுமென்பதுமாகும். இவ்விரண்டு நோக்கங்களையும் பிரதானமாகக்கொண்டே அவர்கள் தங்கள் சிபார்சுகளை வெளியிட்டனர். இலங்கையிலுள்ள நிலைமையினையும் அரசியல் விஷயங்களில எமக்கு வேண்டியனவற்றையும டொனமூர் கமிஷனர்கள் சரிவர உணராமையினால அவர்களுடைய நலநோக்கம் நிறைவேறவில்லை. ஆகவே அவர்கள் உணரமுடியாமைக்கு காரணங்கள் அவர்கள் போதியகாலம இலங்கையில் தங்காமையும் இங்குள்ள மக்களையும் விஷயங்களையும பற்றி மேலவாரியாக ஆராய்ந்தமையுமாம். டொனமூர் திட்டமானது (இலங்கைவாசிகளுக்கன்றி) சிங்கள மக்களுக்கே பத்தில் ஏழுபங்கு சுயராச்சியத்தை அளித்தமையினால் அது அங்கீகரிக்கப்பட வேண்டுமென வாதித்த மாந்தர்களின்மனப்பான்மையை டொனமூர் கமிஷனர்கள் ஒரு சிறிதேனும உணர்ந்திருப்பார்களாயின் அவர்கள் இன்று நடைமுறையிலுள்ள அரசியல் திட்டத்தை ஒருபோதும் சிபார்சு செய்திருக்கமாட்டார்கள். சோல்பரி கமிஷனர்களைப் போலவே டொனமூர் கமிஷனர்களும் நம்மவர்களால் எங்கேகும் அழைத்துச் செல்லப்பட்டு உபசரிக்கப்பட்டனர். விசாரணை செய்வோர் உண்மையினை உணர்ந்து சரியான தீர்ப்பு கூறுவதற்கு இம்முறை யினால் மட்டும் விஷயங்களை அறிதல் போதாது. சரியாக விஷயங்களை ஆராய்ந்து அறிதற்கு இந்நாட்டு மக்களும் கமிஷனர்களும இன்னும் எவ்வளவோ முயற்சிகள் செய்தல வேண்டுமென்பதைக் கூறுவது அநாவசியமாகும்.

சோல்பரிப்பிரபுவும் அவருடைய சகாக்களும் மாட்சிமைதங்கிய மன்னர்பிரான் சாம்ராஜ்யத்தின் கீழ்ப் பாகத்தில் வாழும் மக்களைப்பற்றியும் ஆங்குள்ள நிலைமையைப் பற்றியும் முன்னரே அனுபவம் பெற்றிருந்தால அது அவர்கள் மேற் கொண்டுள்ள வேலைக்குப் பெருந் துணையாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

டொனமூர் கமிஷனர்களின் பெரும்பிழையை அனுபவ வாயிலாக நமது தலைவர்களுட் சிலர் நன்கு உணர்ந்தனர். அதன் காரணமாகவே அரசாங்கசபை அங்கத்தவருள் ஒருவராகிய திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்கள், அரசியற்சீர்திருத்தத்தினையிட்டு விசாரணை செய்தற்கு ஓர் கமிஷன் வேண்டுமெனப் பிரேரிக்கும்போது இலங்கை அரசியல் திட்டம் சம்பந்தமான விஷயங்களை விசாரித்தற்குப் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழ்நாடுகளில நிர்வாக அனுபவம் பெற்ற அவைகளை அறிந்த ஓர் குழுவினரே நியமிக்கப்படவேண்டுமெனக் கேட்டனர். இந்த யோசனையடங்கிய பிரேரணை திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்களால் அரசாங்கசபையில ஏகமனதாக நிராகரிக்கப்பட்டது. 1939-ம் ஆண்டில் யாழ்ப்பாணச்சங்கத் தலைவராகிய திரு. எஸ். கனகசபை அவர்களின் தலைமையில கொழும்பு நகரசபை மண்டபத்தில் கூடிய அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டில கீழ்நாடுகளில் நிர்வாக அனுபவம் பெற்று அவற்றை அறிந்த பெரியார்களைக்கொண்ட ஓர் கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தவகையில இப்போது வந்துள்ள கமிஷனர்களுக்கும குறைபாடுகள் இருந்தபோதிலும அவர்கள் விஷயங்களைத் தாங்களாகவே விளங்கி நிதானித்து நியாயமான தீர்ப்புகளை அளிப்பார்களென நம்புகின்றோம்.

டொனமூர்க் கமிஷனர்களுக்கு இருந்ததிலும பார்க்க ஒருவகையில அதிகமான அனுபவம் சோல்பரிக் கமிஷனர்களுக்கு இருக்கிறது. டொனமூர் கமிஷனர்கள் சம்பந்தப்பட்டவரையில் அவர்களுக்கு முந்தி வந்த கமிஷனர்கள் இலங்கை அரசியல வியவகாரங்களைப் பற்றியெழுதிய அறிக்கைகள் மேற்கோள் காட்டப்படத்தக்க ஆதாரமாக இருந்தனவல்ல; ஆனால சோல்பரி கமிஷனர்களுக்கு மேற்படி ஆதாரமும உதாரணமும இருக்கின்றது. டொனமூர்ப்பிரபுவும் அவர் சகாக்களுமிழைத்த பெருந்தவறுகளையும இதுகாலவரையிலும இலங்கையிலுள்ள விஷயமறிந்த நடுநிலையாளர் ஆவலாக எதிர்பார்க்கின்றமையையும் சோல்பரிப் பிரபுவும் அவர் சகாக்களும் அறிந்திருப்பதனால் நன்மை ஏற்படும்.

அரசியல் விசாரணையின் பொருட்டு இங்கு வந்திருக்கும் பெரியார்களை உபசரித்தமைக்காக இலங்கை வாசிகள் ஸேர். ஒலிவர் குணதிலக அவர்கட்கும மந்திரிமாருக்கும் ஏனையோருக்கும் தங்கள் நன்றிக்கடனைச் செலுத்தல வேண்டும். கமிஷனர்கள் நம்மிடையே வருமுன்பு அன்றைய அரசியல் திட்டம நடைமுறையில அநுஷ்டிக்கப்பட்டுவந்த காலத்திலும் பிரித்தானியமக்களோடும அவர்கள் சம்பந்தப்பட்ட ஏனைய விவகாரங்களோடும ஸேர். ஒலிவரின் நண்பர்கள் (புத்திசாலித் தனத்திலும் மரியாதைச்செலுத்துவதிலும உபசாரம் செய்வதிலும வல்லவரான ஸேர். ஒலிவரால்) புத்திசாலித்தனமாகவும் மரியாதையாகவும் நடந்திருந்தால அவர்கட்கு நலமாக வசதிகள் இன்னும் கூடிய நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள். நமது தலைவர்களுட் பலர் இப்பொழுது ஆக்கமுடையவராகவும் மனத்தைப் பற்ற சிறந்தவராகவும் காணப்படுகின்றனர். சமஷ்டிகள் இலங்கையை ஆட்சி செலுத்தவும இந்த தலைவர்கள் தம் மனப்பான்மையைத் தணிய அருப்பாரென நாம நம்புகிறோமல்ல.

இலங்கை பிரித்தானிய சாம்ராஜ்யத்தில் ஓர் முக்கிய ஸ்தானம வகிக்க

தொடர்ச்சி 6ம் பக்கம்

## கல்வியும் தமிழகமும்

3ம் பக்கத் தொடர்ச்சி

பால் உலகத்து இசை நிறீஇ, வப்பால் உயர்ந்த உலகம் புகுவதற்கும், மனக்கவலையை முற்ற மாற்றுவதற்கும், கடவுளை வணங்க வேண்டும். கடவுள் பக்தி ஏற்படவேண்டும்; தெய்வமென்பதோர் சித்தம் உண்டாகவேண்டும். இஃதின்றேல் கற்றது பூரணமாகாது. எம். ஏ., எம். எஸ். ஸி., டி. லிற்...... முதலிய பட்டங்கள் ஒருவனுக்குக கல்வியின் பயன் முழுவதையும் கொடுக்கமாட்டா. "கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்" எனும் வள்ளுவருடைய வாய்மொழிக்கான இக்காலக் கல்வி யுலகத்தினுள்ள நோய்களை எல்லாம் நீக்கும் பெருமருந்து. கல்விபுலகத்தின் மாத்திரமன்று விசேடமாக அரசியல் உலகத்திற்கு பிறவாற்கும் உயிர் கொடுக்கமருந்து சஞ்சீவினி. "பல கற்றும்; புதியன கண்டோம்" எனத் தருக்கக் கடவுளை மறந்து உலகத்தை அழிக்கும் அசுரர்களுக்கு—சாத்தானின் நண்பர்களுக்கு—நல்லறி வூட்டுவதற்காக ஏற்ற வேண்டிய ஊசி மருந்து (Injection), மனிதர்களை அசுரர்களாக விடாது தேவர்களாக்குவது, சாத்தானுடை சேவிக்காது தேவகுமாரர்க்குவது கடவுள் பக்தியே. இக் கடவுட் பக்தியே கல்வியின் பெரும் பயனுதும். இனி பாருதல் உலகத்தில் அமைதியும், இன்பமும், அன்பும் அருளும், அழகும் அறிவும் நிலைக்கவேண்டுமா வள்ளுவருடைய இக்கூற்று ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு பாடசாலையிலும், ஒவ்வொருவருடைய மனத்திலும் நிலைக்கவேண்டும். சமயக் கல்வியைப் பாடசாலையிற் கற்பிக்க வேண்டுமா? எனும் சந்தேகம் தீருமவரை உலகத்தில எல்லாம சந்தேகத்திற்கிடமாகவே தோன்றும அன்றோ? இதைக், இனிக் மறைவாக்கின சிறப்பைப்பற்றிக் கருதுவோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமபல பிரதிநிதித்துவத்தின் நோக்கம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 அல்லது 6 சிங்களவர்கள் நின்றனர். சிங்கள அதிகப்படியான வாக்குக்களை 5 சிங்களவர் பங்கிட்டுக் கொண்டதால், ஒரு சிறுபான்மை அங்கத்தவர் தற்செயலாகத் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது.

ஜனத்தொகையில் 100க்கு 65 வீதமுள்ளவர்கள் இன்று நூற்றுக்கு 80 ஸ்தானங்களைச் சுலபமாகப் பெறமுடியும். சிறுபான்மையோர் ராசாங்கக் கொள்கையை உருவகப்படுத்த எவ்விதத்தும் முடிவதில்லை. அதனால் சிறுபான்மையோரிடையே ஒருவித ஆசியற் திகைப்பும் கிராசையும் ஏற்பட்டுவிட்டதில் ஆச்சரியமில்லை.

ஜனத்தொகைக்குத் தக்கபடியான விகிதாசாரப் பிரதிநிதித்துவமும் ஏற்படுத்த முடியாது. அசின்படி பறங்கிக்காரருக்கு ஒரு ஸ்தானத்தில் மூன்றில் ஒரு பங்குதான் கிடைக்கும். ஐரோப்பியர்களுக்கு ஒரு ஸ்தானத்தில் 15ல் ஒன்றுதான் கிடைக்கும்!

தமிழர்கள் கேட்பதெல்லாம் இதுதான், 65 வீதமாக உள்ளவர்களுக்கு 50 வீத ஸ்தானங்கள் அளிக்க வேண்டுமென்பதே. அந்த ஒரு சமூகத்தின் இணைப்புப்பலம், 5 சமூகங்களைக் கொண்ட மற்றச் சிறுபான்மைச் சமூக பலத்தைவிட 5 பங்கு அதிகமாக விருக்கும். வகுப்பு வேற்றுமை நீங்கிய இலங்கைக்கு பாதுகாப்பாக யிருந்தால் தான் பிரிட்டன் பெருமை கொள்ளலாம். அவ்விதமில்லமை ஏற்படும்வரை வகுப்புவாரி முறையில பிரதிநிதித்துவம் அவசியம்.

**ஒரு நிரந்தரமான பெரும்பான்மைச் சமூக ஆதிக்கத்தை, சட்டபூர்வமான ஆதிக்கத்தை, மாற்றவோ, அசைக்கவோ, திருத்தவோ, அன்றிக் குறைக்கவோ முடியாமல் ஸ்திரமாகக்குவதை பிரிட்டன் சகித்துக் கொண்டிருக்கப் போகிறதா என்று கேட்கிறேன்.**

வியாழக்கிழமையன்று 4½ மணி நேரம் சாட்சியங் கூறி மீண்டும் வெள்ளிக்கிழமை 4 மணிநேரம் திரு ஜீ ஜீ பொன்னம்பலம் தமது சாட்சியத்தைத் தொடர்ந்து கூறினர்.

திரு ஜீ ஜீ பொன்னம்பலம் கூறியதாவது:—

வடமாகாணத்திலுள்ள 9 ஸ்தானங்களில் ஒன்றை முஸ்லீம்களுக்கு ஒதுக்க வேண்டும். மன்னார்ப் பகுதியில் முஸ்லீம்களுக்கு ஒரு ஸ்தானம் இருக்கவே வேண்டும். கிழ் மாகாணத்திலே 7 ஸ்தானங்களில் மூன்று முஸ்லீம்களுக்கு இருக்கவேண்டும்.

டொனமூர் திட்டத்துக்கு முன் 23 பேரிருந்த சபையில் சபையில் தமிழர் 7 பேரங்கத்தினரா யிருந்தனர். அங்கத்தவர்கள் எண்ணிக்கை 100க்கு உயர்ந்தால், அதற்குத் தக்கபடி, தமிழர்க்கு யாழ்ப்பாணத்தில் பிரதிநிதித்துவம் அளிப்பதையும ஆதரிக்கிறேன். சிங்களப் பிரதேசங்களிலும் இதே மாதிரித் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஏற்பாடு செய்ய வேணடும.

பல பிரதிநிதிகளை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால இரு சமூகங்கள கலந்துள்ள தொகுதிகளில இரண்டு சமூகப பிரதிநிதிகளுக்கும இடமேறபடும்.

இரத்தினபுரியிலே 51 ஆயிரம் இந்தியரும கேகாலைப் பகுதியில் 63 ஆயிரம் இந்தியரும் 1931-ம் வருட ஜன சங்கியையின்படி உள்ளனர். இவர்களுக்காக இரு பிரதிநிதத்துவத் தொகுதிகளை அங்கு அமைக்கலாம். வடமேற்கு மாகாணத்தில் 14 ஆயிரம் முஸ்லீம்களுள்ளனர், அவர்கள் பிரதிநிதித்துவத்திற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மந்திரிகள் திட்டத்தில் கூறியுள்ள பிரதிநிதித்துவ ஏற்பாட்டை திரு பொன்னம்பலம் ஆட்சேபித்து வடமத்திய மாகாணத்துக்கு 5 அதிக ஸ்தானங்கள் சிங்களவருக்கும் கிடைக்குமென்றும் சொன்னர்.

### இந்தியர் வாக்குரிமைக்கு ஆதரவு

திரு பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:—

1801-ம் வருடம் இலங்கை சென்னை மாகாண ஆட்சிக் குட்பட்டிருந்தது. அச்சமயம் பலர் இலங்கைக்கு வந்தனர். அதுமுதல் இந்தியர்கள் இங்குள்ளவர்களுடன் சம அந்தஸ்துப் பெற்றுத் தேசத்தின் செழிப்புக்கு எவ்வளவோ உழைத்துள்ளனர். அரசியல் உரிமைகளிலும் வித்தியாசமிருந்ததில்லை. டொனமூர் கமிஷன் சர்வ ஜன வாக்குரிமை யளித்தது. ஆனால் இந்தியர் வாக்குரிமைக்குப் பல கஷ்டங்கள் உள்ளன.

1920-21-ம் வருஷத்தில் இலங்கையில் உணவுப் பஞ்சமேற்பட்டபோது இலங்கையிலிருந்து சென்ற ஒரு தூதுக்கோஷ்டி இலங்கையை இந்தியாவின் ஒருபகுதியாக மதிக்க வேண்டுமென்று இந்திய அரசப் பிரதிநிதியைக் கேட்டது, மற்றோர் முறை வேறோர் தூதுக்கோஷ்டி சென்று இலங்கைக்கு இந்தியத் தொழிலாளர் செலலுவதைத் தடுக்கக்கூடாதென்றும் உலகின் வேறு பகுதிகளைப்போல் இலங்கையைக் கருதக்கூடாதென்றும கேட்டது. இதிலிருந்து இலங்கை இந்தியாவின் ஒரு பாகமாகவே கருதப்பட்டு வந்துள்ளது வெள்ளிடைமலையே யாகும்.

இந்தியர் வாக்குரிமை விஷயமாக முன்னர் எவ்விதத் தடைகளுமிருந்ததில்லை. டொனமூர் திட்டத்திற்குப் பிறகுதான் இந்தியர் வாக்குரிமை பெறுவதற்கு மந்திரிகள் தடையேற்படுத்தினர்.

திரு மொஸமூரே கேகாலைப்பிரதிநிதியாக இருக்கையில, அரசாங்க சபையில் கொண்டுவந்த ஓர் தீர்மானத்திற்குப் பிறகுதான இந்தியத் துவேஷஉணர்ச்சி ஆரம்பமாயிற்று.

இத் தேச சுபீட்சத்துக்கு உழைத்துள்ள இந்தியத் தொழிலாளிக்குப் பாதகமாக வேற்றுமையுண்டாக்குவது நியாயமற்றதாகும். அவர்களுக்குப் பிரஜா வுரிமை வழங்கவுமபல நிபந்தனைகள் கேட்கப்படுகின்றன. இந்தியத் தொழிலாளரில பெரும்பாலோர் இலங்கைத் தோட்டங்களிலேயே பிறந்தவர்கள். யுத்த முயற்சிக்கான ரப்பரும், தேயிலையும உற்பத்தி செய்பவர்கள். அவர்கள உரிமையை மதிக்க வேண்டும,

ஸோல்பரி பிரபு:— "இந்தியர் வாக்குரிமை பெற என்ன யோக்கியதாம்ஸம் வேண்டுமென்பது தங்கள கருத்து?"

திரு ஜீ ஜீ பொன்னம்பலம்:— "18 மாத காலத்துக்குள் 6 மாத காலம் ஒரேயடியாக இலங்கையில வசித்திருக்க வேண்டும்.

கேள்வி:- அப்படியாயின் தேர்தலுக்காக இங்கு இந்தியர்கள் வரவழைக்கப்படமாட்டார் களா?

திரு பொன்னம்பலம்:- "அதுசாத்தியமல்ல, [illegible] இந்தியாவுக்குச் சென்று 10 லட்சம் பேரைத் தேர்தலுக்காக அழைத்து வந்து 18 மாத காலம் சாப்பாடு துணிமணி அளித்து வாக்குரிமை யளிப்பதென்பது நடக்கக்கூடிய காரியமல்ல.

இந்தியத் தமிழரும் இலங்கைத் தமிழரும் சேர்ந்து 15 லட்சத்துக்கு மேலாவர்.

ஸேர் மீஸ்:- அப்படியாயின் இந்தியர்களோடு ஏன் கூட்டாகச் சேர வேண்டுமென்கிறீர்கள்?

திரு பொன்னம்பலம்:- நாங்கள் அழிந்து போகாமலிருப்பதற்கு.

மிஸ்டர் பரேஸ்:- இலங்கையில் 5 வருடமிருக்கும் இந்தியர் இந்திய பிரஜாவுரிமையை விட்டுவிடுகிறாரா?

திரு பொன்னம்பலம்:- ஆம் இழந்துவிடுகிறார்.

பின்பு திரு பொன்னம்பலம் மந்திரிகள் தங்கள் சமூக நலனுக்காகவே பல அரசியல் யோசனைகளையும் கூறி வந்திருப்பதாகச் சொல்லி சர்வ சிங்கள மந்திரிசபையை அமைத்த விவரங்களை விளக்கினர்.

பின்னர் இந்தியாவில் கிளம்பியுள்ள பாகிஸ்தான் யோசனையையும் அதற்குப் பதிலாக ஸேர் சுல்தான் அகமது ஓர் திட்டம் தயாரித்துள்ளதாயும், அதைச் சாப்ரூ சபையினர் ஆலோசித்து வருவதாகவும், நாஸிக் கமிற்றி முறை, சமபலப் பிரதிநிதித்துவம் முதலிய விஷயமாகப் பல அரசியல் நிபுணர்கள எழுதியுள்ள அபிப்பிராயங்களையும், திரு பொன்னம்பலம் எடுத்து விளக்கினர்.

திரு மகாதேவா எவ்விதம் மந்திரி சபையுட் புகுந்தார் என்று கேட்கப்பட்டபோது திரு பொன்னம்பலம், அந்த விஷயத்தைக் கூறப்போந்தால தனிப்பட்ட நணபர்களைப் பற்றி நேரடியான சில விஷயங்களைச் சொல்ல வேணடி வருமாகையாலும், இன்றைய அரசிய லந்தாங்கங்கள் பல வெளிப்படுமாகையாலும் தாம அந்த விஷயத்தி லிறங்கவில்லையெனக் கூறினர்.

சாட்சிய முடிவில் திரு பொன்னம்பலம தம் சாட்சியத்தை ஆகாவுடன் கேட்டதற்காகச் சோல்பெரி விசாரணைச் சபையினர் மூவருக்கும் தம நன்றியைச செலுத்தினர். ஸோல்பெரி பிரபுவும் திரு பொன்னமபலத்துக்கு முறையே நன்றி செலுத்திச் சிறுபான்மையினர் ஆசியற குறைகளை இவ்வளவு விசேஷமாக வேறெவரும் எடுத்துச சொல்லியிருக்க முடியாதென்றும் கூறினர்.

இத்துடன் தமிழ்க் காங்கிரஸ் தூதுக் கோஷ்டியின் சாட்சியம் வெள்ளிக்கிழமை மாலை 4-15 மணிக்கு முடிவுற்றது.

### தேகவியோகம்

இணுவிலில் பிரபல குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் க. சபாபதி ஆசிரியர் அவர்களின் பாரியாரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. க. சபா. ஆனந்தர் B.O.L. அவர்களின் தாயாருமாகிய ஸ்ரீமதி பொன்னம்மாள் சென்ற 18-1-45 அன்று காலமாயினர்.

அவர்தம் அந்தியேட்டிக் கிரியையின் போது சைவபரிபாலன சபைக்கென விடுத்தனுப்பிய ரூபா 3 நன்கொடைப் பணம் வரப்பெற்றும்,

மனேஜர்

விளம்பரமின்றேல் பெருமையில்லை

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### செவ்வாய் பெப் 20

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 சூடாமணி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை பாட்டு 9 முடிவு,

1 கதம்பம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 அழியூர் குஞ்சுமணி புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 திருச்சேறை ஆர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 அழியூர் குஞ்சுமணி புல்லாங்குழல் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7 15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7.35 குரல்வகை † 7-45 தமிழில் செய்திகள் 8 மதாரவில் உள்ளபடி 9 போர்முனையிலே 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 எதிர்கால சர்வதேச உறவு 10 இசைவேளை † 10-30 முடிவு.

### புதன் பெப்ரவரி 21

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 மனோன்மணி † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 என் ராமநாதன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 அப்துல் கனி 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 திருவிழிமிழலை என் சுப்பிரமணிய பிள்ளை வயலின் 5-40 இசைப் பயிற்சி † 6 எஸ் ஆர் கோவிந்தசாமி பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இயந்திர விளக்கம் 7.30 அறிவிப்புகள் 7-35 வானொலி வாத்யகோஷ்டி 7.45 தமிழில் செய்திகள் 8 ஹிந்துச் சட்டத் தொகுப்பு 8-30 திருவீழிமிழலை என் சுப்ரமணிய பிள்ளை வயலின் 8.45 எஸ் ராமநாதன் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 மக்களுக்குப் பால்விநியோகம் 10 ஐரோப்பிய சங்கீதம் † 10-30 முடிவு.

### வியாழன் பெப் 22

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 படப்பாட்டுகள் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 ஆர் இராசேஸ்வரி வீணை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 லக்ஷ்மிநாராயணன் நாயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஆர். ராஜேஸ்வரி வீணை பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 லக்ஷ்மி நாராயணன் நாயர் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ரஸ்கா முன்னேற்றம் 7-30 அறிவிப்புகள் 7-35 காரும்புகாரும் 7-45 தமிழில் செய்திகள் 8 சிதம்பரம் ஜயராம் பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### பர்மா யுத்தமுனை

மண்டலேநகருக்குத் தெற்கிலும் மேற்கிலுமுள்ள சில கிராமங்களில் சிலவற்றைப் பிருத்தானிய கிழக்குப் பகுதி ஆகாயப்படை தாக்கியது. அரக்கன் பகுதியில் யப்பானியருக்குரிய சில பாகங்களில் பிருத்தானிய ஆகாயப்படை குண்டுபெய்தது. ஐக்கியராச்சியத்தினருக்குரிய இரண்டு விமானங்கள் மீண்டு வரவில்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஆசிரியர்களின் கதி

"சிவகுமாரன்"

வேலையில்லாமல் திண்டாடும் ஆசிரியர்களுள் யானுமொருவன். கடைசி இப்படி எழுதும்வேலையாகுதல் எனக்குக் கிடைத்தது மனத் திருப்தி.

திரும்பத் திரும்பப் பன்முறை பத்திரிகை வாயிலாகத் தமிழாசிரியர்களின் கஷ்டங்களைப் பற்றி பெழுதினும் வித்தியாபகுதியினர் செவி சாய்ப்பதாகக் காணவில்லை. வித்தியாகர்த்தர் திரு. பெரோரா கூடிய நன்மை செய்வாரென ஆசிரியர்கள் எதிர்பார்த்திருந்தனர். யாவரையும் தவிர்க்கவிட்டு அவரும் மறைந்துவிட்டார்.

வருடாவருடம் பயிற்றப்படுவதற்காக ஆசிரிய கலாசாலைகளுக்கு எடுக்கும் S. S. C, ஆசிரிய தராதரப்பத்திரம் சித்தியடைந்தோர் தொகை எவ்வளவென்பது தெரியுமா. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் இப்பொழுது ஆறு ஆசிரிய கலாசாலைகளுண்டு. ஆசிரியர்களும் ஆசிரியைகளுமாக ஏறக்குறைய நூறு ஆசிரியர்கள் வருடாவருடம் பயிற்றப்பட்டு வெளியேற்றப்படுகின்றனர். இப்படி வெளியேறுபவர்களுள் அடுத்த வருடம் முடியுமுன் ஆசிரிய உத்தியோகம் பெறுவோர் எத்தனைபேர்! ஐந்து வருஷம் சென்றாலும் உத்தியோகம் பெறாமல் இருப்போர் எத்தனை பேர்? வேலையில்லாமல இருக்கும் ஆசிரியர்களின் தொகையெவ்வளவென்பது வித்தியா பகுதியினருக்குத் தெரியும். அப்படியிருக்கவும் வருடா வருடம் பெருந்தொகையான ஆசிரியர்களைப் பயிற்றி வெளியேற்றுவதன் நோக்கமென்ன? வருகிறமுறை ஒவ்வொரு ஆசிரிய கலாசாலையிலும் நூறு அறுபேர் சேர்க்கப்படுவரென ஒரு வதந்தியுண்டு.

S. S. C. சித்தியடைந்த மாணவர்கள் என்மேற கோபிக்கக்கூடும். பயிற்றப்படுவதற்குத் தங்களைத் தெரியாதுவிடின் தங்களுக்குக் கஷ்டம் உண்டாகலாம் என்று எண்ணுவார்கள். ஆனால் அவர்கள் பயிற்றப்பட்டபின் இடம் கிடையாது இருக்கும்பொழுது படுங் கஷ்டம் கூற முடியாது. மூன்று வருடப் பயிற்சியாக இருந்ததை இப்பொழுது இரண்டு வருடப் பயிற்சியாக மாற்றிவிட்டனர். இதனால் விரைவாக ஆசிரிய உலகம் பெருக்கமடைகிறது. தமிழன்பர்கள் ஆசிரிய உலகம் பெருக்கமடைவது நன்மைதானே எனக் கூறலாம். ஆனால், ஆசிரிய உலகத்தில் உத்தியோகப் பஞ்சம் எப்பொழுது நீங்குகின்றதோ அன்றுதான் தமிழ் வளர்ச்சி யடையுமென நம்பமுடியும். ஆரம்பத்தில் அரசினர் ஆசிரிய கலாசாலைகளில் பயிற்றப்படுவோருக்கு இருந்த சலாக்கியங்களை நீங்களறிவீர்கள். விடுதிப்பணம் கிடையாது. புத்தகங்கள் வாங்க 50 ரூபா அரசினர் கொடுப்பர். அவ்வளவுதானா? மாதம் சில்லறைச் செலவுக்கு (Pocket Expense, 5 ரூபாவீதம் கொடுத்தனர் என ஒருவர் கூறினர், ஏனைய இப்போ பயிற்றப்பட்டவர்கள், முன் நடந்ததை யெப்படி அறிவோம். அப்பொழுது பயிற்சிமுடியுமுன் பாடசாலை மனேச்சர்கள் கலாசாலைக்குச் சென்று தங்களுக்குத் தேவையான ஆசிரியர்களைத் தெரிந்துகொண்டு செல்வார்களாம். வித்தியாபகுதியினரும் அரசினர் பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை நியமித்து விடுவார்களாம் இதனால் பிற்காலத்து ஆசிரியர்கள் பயிற்றப்படுவதற்காகச் சென்றார்கள். அரசினர் ஒரு பழக்கத்தை உண்டாக்கிவிட்டனர். அதில் ஈடுபட்ட ஆசிரியர்கள் இப்பொழுது தங்கள் செலவிற் பயிற்சியை முடிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர், இதை யெண்ண தேநீர் கொடுக்கும் பகுதியினரின் ஞாபகம் வருகிறது. (Tea Propaganda)

இந்த வருடம் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலைக்குத் தெரியப்பட்ட ஒரு தமிழ்S, S. C, சித்தியடைந்த மாணவன் இருகிழமைகளாகப் போய்ச் சேர்ந்து கற்றார். பின்னர் அதைவிட்டு நீங்கி ஆங்கிலம் படிக்கின்றார். அவர் கிடைத்தற்கரிய இந்தச் சந்தர்ப்பத்தைத் தியாகம் செய்ததேனோ? யோசித்துப்பாருங்கள். அவர் இப்பொழுது ஆங்கில S. S. C படிக்கின்றார். ஆசிரிய கலாசாலைக்குத் தெரியப்படும் பொழுது ஆங்கில S. S. C படித்துக்கொண்டுதா னிருந்தார்.

இக்காலத்தில் தமிழ் S S C சித்தியடைந்ததும் ஆங்கிலக் கல்வியையே கற்கின்றனர். தமிழ் ஐந்தாம் வகுப்புச் சித்தியடைந்ததும் மாணவர்கள் ஆங்கில பாடசாலைக்குச் சென்று விடுகின்றனர். காரணம் ஆங்கிலக் கல்வியுள்ளவர்களுக்கே உத்தியோகம் சீக்கிரம் கிடைக்கிறது.

எத்தனையோ ஆங்கில பாடசாலைகளில் ஒரே முறையில் இரண்டு மூன்று ஆசிரியர்களுக்குச் சராசரி கூடியதால் இடம் உண்டாகியிருக்கிறது. மறுபுறம் பெரும்பாலும் தமிழ்ப் பாடசாலைகளில் குறைந்தது ஒரு ஆசிரியராயினும் சராசரி வீழ்ச்சி காரணமாக விடவேண்டியிருக்கிறது, தமிழ்ப் பாடசாலைகளில் சராசரிகூடியிருக்கிறது என்று சொல்லயான் கேட்கவில்லை. அதுவும் தை மாசி மாதங்களில் தமிழ்ப்பாடசாலைகளைப் பார்ப் போவாரென்ன? ஆங்கிலப் பாடசாலைக்குப் போகும் காலமல்லவா? தமிழ்ப் பாடசாலைத் தலைமையாசிரியர் ...

இப்படி நிலைமை யிருப்பதனால் சராசரி வீழ்ச்சிகாரணமாக விடும் ஆசிரியர்களின் கதியென்ன! இடம் கிடையாது தவிக்கும் ஆசிரியர்களின் கதியென்ன? ஆங்கில பாடசாலைகளில் தமிழ்ப்பாடங்களைக் கற்பித்தற்கு ஒரு தமிழாசிரியர் நியமிக்கப்படலாம். சில ஆங்கில பாடசாலைகளில் ஆங்கில தராதர முடையவர்களே தமிழ் கற்பிக்கின்றனர். இன்னும் வித்தியாபகுதியினர் ஆங்கில பாடசாலைகளுக்கும் சிங்கள பாடசாலைகளுக்கும் தமிழ் கற்பிப்பதற்குத் தமிழ் ஆசிரியர்களை நியமிக்கலாம். தமிழ்ப் பாடசாலைகளுக்கும் ஆங்கில பாடசாலைகளுக்கும் சிங்களம் படிப்பிக்கச் சிங்கள ஆசிரியர்களை நியமிக்கலாம். பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலக் கல்விக்குச் செல்வதால் இப்பொழுதுள்ள ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டிய சராசரி வீதத்தைக் குறைத்து ஆசிரியர்களைக் கூடுதலாக எடுக்கலாம்.

இன்னும் ஒன்றுகூற விரும்புகின்றேன். அரசினர் பாடசாலைகளில் ஆசிரியைகளுக்குச் சீக்கிரம் இடங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. சைவாசிரிய கலாசாலையிலிருந்து பயிற்றப்பட்டு வெளியேறும் ஆசிரியர்களுக்கு அந்தக் கலாசாலை முகாமைக்காரரால் இடம் கொடுக்கப்படுகின்றது. ... மேரி ... ஆசிரியர்களுக்கு மிஷன் பாடசாலைகளில் இடங்கள் கொடுக்கப்படுகின்றன. இப்படியிருக்க அரசினர் ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளியேறும் ஆசிரியர்கள் இடமின்றித் தவிக்கின்றனர். இவர்களுக்கு அரசினர் பாடசாலைகளில் இடங்கள் வரும்பொழுது கொடுக்கப்பட்டால் நன்றாயிருக்கும், இன்னுமின்னும் ஆசிரியர்களைப் பெருக்காது வேலையில்லாதிருக்கும் ஆசிரியர்களுக்கு வேலையைக் கொடுத்த பின்னர் தேவையான தொகை பயிற்றப்படுவதற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் நன்று.

இவ்விஷயத்தை வித்தியா பகுதியினர் தமிழ் ஆசிரியர்களின் நலனைக்கோரி நன்கு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## இந்துசாதனம்

பத்திரக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ் |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 6 50 | 6 50 | 10 50 |

இந்தியா இலங்கை தபால்மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ். |
|---|---|---|
| ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 9 50 | 9 50 | 13 50 |

## கூப்பன்கள் தவறிவிட்டன

No. Q 048422
Q 048423
Q 048424 — வீட்டு இலக்கம் 293, காங்கேசன்துறை ரோட்.
Q 048425
Q 048425

வண்ணார்பண்ணை மத்திய பண்டசாலை 36-ம் கிழமைமுதல் 52-ம் கிழமை வரையில் செல்லக்கூடியன. கிடைக்குமானால் மேற்படி பண்டசாலை மனேசரிடம் கொடுத்தால் சன்மானம் பெறுவர்.

(Mis. 224 19-2-45)

## சோல்பெறிக் கமிஷனும் நாம் செய்யவேண்டிய முயற்சியும்

4-ம் பக்கத் தொடர்ச்சி

கின்றமையால் அதன் அரசியலமைப்பையிட்டுக் கமிஷனர்கள் தயாரிக்கின்ற அறிக்கையினைப் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் இருசபையினராலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஓர் கமிட்டியினர் ஆராய்ந்து கவனிப்பார்களென நம்புகின்றோம்.

இப்பொழுது சோல்பரிப் பிரபு, சேர். பிறெடறிக் றீஸ், திரு. ரூஸ் ஆகிய பெரியார்கள் மூவரும் இங்கு ஆனந்தமாகத் தங்கித் தாங்கள் மேற்கொண்ட முயற்சியைச் செவ்விதாக் நிறைவேற அருள்புரியுமாறு நாமெல்லோரும் இறைவனை வேண்டுவோமாக.


# புதியதினிசுகள் யாவும் இங்குள்ளன!

இந்தியாவிலுள்ள நாகரீக வட்டாரத்திலுள்ள அழகான புடைவைகள்

யாவும் புதியன — யாவும் கண் கவர்வன

வந்து ஒருதரம் பார்வையிட்டால் ஒன்றிற்கு மேற்படவே வாங்குவீர்கள்

நாகரீக நங்கைக்கும் — மணப் பெண்ணுக்கும் ஏற்றவை

எவ்விழாவிற்கு முகந்த பட்டுக்கள்

ஜாரி - ஜோர்ஜெற் - ஓர்கென்ஸா

நைநொன் - ரிஷ்யூ - பிஷ்நெற்

எம்புறெயிடேட் நெற் முதலியன

## நொவெல்ற்றி ஸில்க் ஸ்டோர்

பெனுரிஸ் பட்டுக்கள் ஏராளமாகத் தருவிப்போர்.

பெருந்தெரு, யாழ்ப்பாணம்.



## மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப் பிரசவத்தை முற்றாகத் தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம், டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா" கற்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிகாரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றைத் தடுத்து மற்றும் நாட்சென்ற கற்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, கச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கற்பப் பையில் புகுந்து அகணித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டு பண்ண விடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம், மாதரின் கற்பகாலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும், நூற்றுக் கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால் அண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொனஸிஸ்றறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல இம்போட்கம்பெனி

28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

U. 131 12-10-44—


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 19, February, 1945.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org